விலை சதம் 10

சுதந்திரன்

SUTANTIRAN

வ. ஆ: 2001, சித்திரை 24 உ வியாழன் (7-5-70) ஸபர் பிறை 30 — புத்தகம் 24 இதழ் 30

## மந்திகை ஆஸ்பத்திரி விளம்பரப்பலகையில்:

# சிவசிதம்பரத்தின் பெயர் இடம் பெற்ற மர்மம் என்ன?

## வடமராட்சி மக்கள் திகைப்பு!

பருத்தித்துறை, மே 6

மந்திகை ஆஸ்பத்திரியில் புதிதாகக் கட்டப்படும் கட்டடத்தில் தொங்கவிடப்பட்டுள்ள ஒரு விளம்பரப் பலகையில் திரு. மு. சிவசிதம்பரம்என்றபெயர் இடம் பெற்றது எப்படி? இது மராமத்து திணைக்களத்தினரால் பொறிக்கப் பட்டதா? அல்லது திரு. சிவசிதம்பரத்தின் வேலையா? மராமத்து திணைக்களத்தினரால் எழுதப் பட்டிருந்தால், மும்மொழியிலும் அல்லவா எழுதப்பட்டிருக்கும்? இதன் மர்மம் புரியாமல் திகைக்கிறார்கள் வடமராட்சி மக்கள்.

பருத்தித்துறை வைத்திய சாலையில் (மந்திகை ஆஸ்பத்திரி) புதிதாக ஒரு கட்டடம் கட்டப்பட்டுவருகிறது அதில் தொங்கவிடப் பட்டுள்ள சுமார் 3x2 அடிகள் கொண்ட விளம்பரப் (கறுப்பு) பலகையில் பின் வரும் வாசகங்கள் வெள்ளை எழுத்துக்களில் இடம்பெற்றிருப்பதைஅங்குசெல்வோர் காணலாம்.

கட்டட இலாகா

கதிர், சத்திரசிகிச்சை நிலையங்கள்

ஒப்பந்தக்காரர் —
வீ. கணபதிப்பிள்ளை

புலோலி— அனுராதபுரம்

கௌரவ ஈ. எல. சேனநாயக்கா,
சுகாதார அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது.

திரு. மு. சிவசிதம்பரம்
உபசபாநாயகர்
பா. உ. உடுப்பிட்டி

ஒப்பந்தத் தொகை.
ரூபா 2,34,987-90 சதம்

இவ்வாறு முடியும் இவ் விளம்பரத்தின் மொத்த வரிகள் 12. ஒன்பதாவது வரி திரு. மு. சிவசிதம்பரம்'' மட்டுமே பத்தாவது வரி ''உபசபாநாயகர்'' பா. உ. உடுப்பிட்டி''

(4-ம் பக்கம் பார்க்க)

# எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தார்; 'இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே

## பாரதிதாசன் பாடலை நினைவூட்டி பண்டிதர் நெடுந்தீவில் முழக்கம்!

(வேலணை நிருபர்)

''எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தார் இங்குள்ளதமிழர்கள் ஒன்றுதல் கண்டே'' என்ற பாரதிதாசன் கூற்றின்படி இங்கே திரண்டிருக்கும் மக்கள் வெள்ளத்தைக் காணும் போது நான் மட்டிலா மகிழ்ச்சி யடைகிறேன். எனது வெற்றி பல ஆயிரக்கணக்கால் இங்கு திரண்டிருக்கும் மக்கள் வெள்ளம் எனக்கு எடுத்தியம்புகிறது. நான் எப்படி கிளிநொச்சியில் இருபத்தி நாலு மணித்தியாலமும் சேவை செய்து மக்களின் துயர் துடைக்கப் பாடுபட்டேனே அதுபோல் ஊர்காவற்றுறைத் தொகுதியில் பின் தங்கிய நிலையிலுள்ள உங்கள் தொகுதியின் முக்கிய பிரச்சினையான



போக்குவரத்துப் பிரச்சினை குடிநீர் பிரச்சினை முதலிய

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களை அழித்துவிடும்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரசுக்கு இத் தேர்தல் மூலம் மீண்டும் புத்துயிர் அளிக்க வேண்டாம. அது புத்துயிர் பெறுமேயானல் கட்டாயமாகத் தமிழ் மக்களை அழித்துவிடும. இந்த ஆபத்தை தமிழ் மக்கள் தேடிக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

—வீ. காராளசிங்கம்.
(உடுவில் கூட்டணி வேட்பாளர்)
(வீரகேசரி 6-5-70)

# நவரத்தினராசா வாக்குவேட்டையின் போது நடந்த ருசிகரமான சில சம்பவங்கள்!

திருகோணமலை மே 6

கடந்தவாரத்தில் ஒருநாள் திருகோணமலையின் ஐ. தே. க. வேட்பாளர் திரு. வி. ஆர். நவரெட்ணராசா தனது ஆதரவாளர்கள் சகிதம் இங்குள்ள பத்தாம் குறிச்சி என்னுமிடத்துக்கு வாக்கு வேட்டைக்காக வந்த சமயத்தில் மிகவும் ருசிகரமான சம்பவங்கள் நடைபெற்றன. வீட்டிற்குவீடு கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன. கேள்விகளுக்கு மழுப்பலுடன் சென்றனர் ஐ. தே. க. வேட்பாளரும் அவர் தம் ஆதரவாளர்களும்.

ஓர் வீட்டில் ஒரு வாலிபன், வந்த வேட்பாளரையும், அவருடைய மனைவி மற்றும் ஆதரவாளர்களையும் இருக்கச் செய்து தனது சந்தேகங்களை தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொண்டார். அவரும் 'ஆம்' என்றுசொல்லவே, அவ்வாலிபன், 1947, 1949ம் ஆண்டுகளில் யூ. என். பி. அரசாங்கம் தமிழினத்தின் சரிபாதி மக்களுடைய வாக்குரிமையைப்பறித்து அவர்களது அரசியலுரிமைகளைப் பறித்தெறிந்ததைக்கூறி யூ. என். பி. கட்சி தமிழ் மக்களுக்கு கொடுமைகள் செய்ததா? இல்லையா? என்று வினவினார். அதற்கு நவரெட்ணராசா, முக்கி முனகி வில்லங்கங்கள் ஏற்பட்டது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டு அதெல்லாம் பழைய கதை என்று கூறினர்.

இனிமேலும் இருந்தால் மூக்குடைபட்டுப் போகும்

(2ம் பக்கம் பார்க்க)

## பொன்னருக்கு எத்தனை வாய்களோ?

தமிழரசுக் கட்சியின் எந்தக் கோரிக்கையையும் எந்த ஒரு சிங்களக் கட்சியும் வழங்க ஒரு நாளும் முன் வரமாட்டாது.

—ஜீ. ஜீ—(டைம்ஸ் ஆப் சிலோன் 3-5-70)

தமிழரசுக் கட்சியினர் தமது கோரிக்கைகளை சமயோசிதமாக சமர்ப்பித்திருந்தால், அவற்றை வென்றெடுத்திருப்பார்கள்.

—ஜீ. ஜீ —(டைம்ஸ் ஆப் சிலோன் 3-5-70)

## அப்பரும் சுப்பரும்

அப்பர்: மாவைக் கந்தன் ஆலயத்தில் 1968 1969ம் ஆண்டுகளில் நடந்த சமபவங்களுக்கு காரணம் 1957ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக குறைபாட்டு தடைச் சட்டம் என்று மாவை ஆதீனகர்த்தா திரு. சு. துரைச்சாமிக் குருக்களால சுந்தரப்பாவை ஆதரித்து வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறதே! பார்த்தீரா?

சுப்பர்: பார்த்தேன். அப்படியானல் அச் சட்டம 1957ம ஆண்டு பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட போது திரு. சுந்தரலிங்கம் பாராளுமனறத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்? தூங்கினாரா அன்று அச்சட்டம் ஏகமனதாக நிறைவேற பார்த்துக் கொண்டிருந்த சுந்தரலிங்கம், இன்று 13 ஆண்டுகளுக்குப் பின் அதைத் தூக்கிப்பிடித்து ஒட்டு வாங்கமுயன்ருல் மக்கள் ஏமாறுவார்களா என்ன?

# மண்முனைக் கிராமத்துக்கு இராசமாணிக்கத்தின் சேவைகள்!

பட்டிருப்பு, மே 7

மண்முனைக் கிராமத்துக்கு திரு. சி. மூ. இராசமாணிக்கம் தாம் ஆற்றியுள்ள சேவைகள் பறறி சுதந்திரன் நிருபருக்கு பின்வருமாறு தெரிவித்துள்ளார். அவர் ஆற்றிய சேவைகள் வருமாறு:—

மண்முனைத் துறைக்கான பாலம் போடுவதற்கு வேண்டிய சகல முன் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மிக விரைவில் பணம் ஒதுக்கி கட்டிடம் ஆரம்பமாக இருக்கிறது.

மகிளடித்தீவில் மத்திய வைத்தியசாலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரசவ விடுதி கட்டுவதற்கான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.



அம்பிலாந்துறை, கடுக்காமுனை, முனைக்காடு கிராமங்களிலுள்ள பா[illegible]சாலைகளுக்கு

(5ம் பக்கம் பார்க்க)

# அரசியல் எதிரிகளை காக்கவே இராணுவத்தினரிடம் அடிபட்டேன்!

## பருத்தித்துறையில் துரைரத்தினம் விளக்கம்!

பருத்தித்துறை, மே 5

''காங்கிரஸ்காரர்கள் கூறுவதுபோல விஷமத்தனமாகவோ கண்மூடித்தனமாகவோ நான் இராணுவத்திடம் அடிவாங்கவில்லை. சென்ற தேர்தலில் எனக்கு எதிராக வேலை செய்த ஒருவரின் மகனுக்கு அடிவிழுகின்றது எனக்கேள்விப்பட்டுத்தான் நான் ஓடோடியும் அங்கு போய்ச்



(4ம் பக்கம்பார்க்க)

# ''தமிழர்களின் முதுகுத்தோலை உரித்துச் செருப்புத்தைத்து அணிய விரும்புவோரே யூ. என். பி.யின் நண்பர்கள்''—வில்லியம்

அட்டன், மே 6

''கடந்த பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெற்றுவிட்டோம் என்று தம்பட்டமடித்த யூ. என். பி. அரசாங்கம் அமைக்க வக்கற்று, தமிழரசுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்க ஒப்பந்தம் செய்து, தமிழரசுக்கட்சிக்கு மண்டியிட்டதை மறந்து, ஒரு ஒப்பந்தமும் செய்யவில்லையே எனக் கூறிக்கொண்டு உங்களது வாக்கை இன்று பெற வருகிறது. இதில் ஏமாறுதீர்கள்.

28-4 70ல் நோட்டனில் நடைபெற்ற ஸ்ரீலங்கா கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய மூதவை உறுப்பினர் திரு. டீ. ஜீ. வில்லியம் கூறினர்.

தமிழர்களுக்கும் நன்மை செய்வோம், தேசிய ஐக்கியமே முக்கியம் என்று கூறும் யூ. என். பி. இன்று யாருடன் கூட்டு சேர்ந்துள்ளது. தமிழர்களின் உற்ற நண்பர்களோடா? கற்ற தலைவர்களோடா? இல்லவே இல்லை. தமிழர்களின் தோலால் செருப்பு தைத்து அணிந்து நடந்தால்தான் எனக்கு தூக்கம் வரும் என்று கூறிய திரு. கே. எம். பி. ராஜரட்ன போன்ற தலைவர்களோடு தான் கூட்டு சேர்ந்துள்ளது. இப்படியிருக்க தேசிய ஐக்கியம் எப்படி உருவாகும் என்று அவர் கேட்டர்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## தமிழ்காங்கிரசின் சின்னத்தனம்

அயலான் சாதனையை தனது சாதனையாக பொது மக்களுக்கு காட்டிப் பீற்றிக் கொள்ளும் சின்னத்தனம், தமிழ் காங்கிரஸ் கட்சியுடன் கூடப்பிறந்த இழிகுணம் என்பதை பல சந்தர்ப்பங்களில் இந்த நாடு அறிந்து கொண்டிருக்கின்றது. தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையில் தமிழரசுக் கட்சியினர் தமது இடைவிடாத கிளர்ச்சிகளினாலும், பிடிவாதத்தாலும் ஈட்டிய வெற்றிகளை யெல்லாம் தனது சாதனையென்று கூறி பெருமையடித்திருக்கிறது— தமிழ் காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கையில்!

"1956ம் ஆண்டுக்கு முன் நியமனம் பெற்ற அரசாங்க ஊழியர் சம்பந்தமாக காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா தமிழ் காங்கிரஸ் தலைவருக்கு ஜனப் பிரதிநிதிகள் சபையில் அளித்த வாக்குறுதிகளை தேசிய அரசாங்கத்தின் மூலம் அமுலாக்கு விக்கவும், அத்துடன் சிங்களத் தேர்ச்சி பெறாத புதிதாக சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு மேலும் மூன்று வருட கால அவகாசம் பெற்றுத்தரவும் முடிந்ததென்பதை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் எடுத்துக் காட்டுகிறது"—

—இவ்வாறு கூறுகிறது பொன்னம்பலம் கட்சியினரின் தேர்தல் அறிக்கை.

இதைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று நமக்கு விளங்கவில்லை—

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்டபோது, தமிழ் அரசாங்க ஊழியர்கள் எக்காரணம் கொண்டும் சிங்களம் படிக்கக் கூடாது என்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், திரு. சி. சுந்தரலிங்கம், ஆகியோருடன் சேர்ந்து கூட்டாகக் கையெழுத்திட்டு ஒரு அறிக்கை விடுத்தார் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம். இந்த அறிக்கை 1956ம் ஆண்டு ஆகஸ்ட் முதலாந் திகதி இந்நாட்டுத் தினசரிகள் அனைத்திலும் கொட்டை எழுத்துக்களில் வெளி வந்தது.

இதைத் தவிர அரசாங்க ஊழியர் பிரச்சினை சம்பந்தமாக திரு. பொன்னம்பலம் என்ன நடவடிக்கை யெடுத்திருக்கிறார்? என்ன அக்கறை காட்டி வந்திருக்கிறார்?

பழைய ஊழியர்கள், புதிய ஊழியர்கள் என்ற பாகுபாடு இன்றி தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரது தொண்டைக்குள்ளும் வலுக்கட்டாயமாக சிங்களத்தை திணிக்க சிங்கள அரசாங்கங்கள் முயன்றபோது திரு. பொன்னம்பலம் எங்கே பதுங்கியிருந்தார்? 1964ம் ஆண்டு கூட்டாட்சி அரசாங்கம் சிங்களத் தேர்ச்சி பெறாத தமிழ் அரசாங்க ஊழியர்களை கட்டாய வேலை நீக்கம் செய்ய உத்தர விட்டபோது அதை எதிர்த்து திரு. பொன்னம்பலமோ அவரது தமிழ் காங்கிரசோ எடுத்த நடவடிக்கைதான் என்ன? சிங்கள ஆட்சி பீடமே, தமிழ் அரசாங்க ஊழியர் மீது கை வைக்காதே என்று ஒரு குரல்தானும் இவர்கள் கொடுத்ததுண்டா?

தமிழ் அரசாங்க ஊழியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளானபோது—வேலை இழக்கும் நிர்ப்பந்தத்துக்கு உட்படுத்தப்பட்டபோது—அதை எதிர்த்து சுண்டுவிரலைக் கூட தூக்காதவர்கள்—தாம் உண்டு, தம் குடும்பமுண்டு, சட்டத் திறமையுண்டு, பணமுண்டு, நல்ல தொழிலுண்டு என்று இருந்தவர்கள்—இன்று தமிழ் அரசாங்க ஊழியர்களின் இரட்சகர்கள் தாமே என்று கூறி யாரை ஏமாற்ற முனைகிறார்கள்!

திரு. பொன்னம்பலம் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு செய்த ஒரேயொரு நன்மையென்னவென்றால், மொழி வழியில் ஒரே இயக்கமாக இயங்கி வந்த தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பிரித்து பிளவுபடுத்தி அரசாங்க எழுதுசேவையாளர் காங்கிரஸ் என்று புதியதோர் குட்டிச் சங்கத்தை உருவாக்கியதுதான்!

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வு கட்டளையை எதிர்த்து அரசாங்க எழுது வினைஞர் சங்கம் வழக்காடியபோது திரு. பொன்னம்பலம் என்ன செய்துகொண்டிருந்தார்? இந்த வழக்கை நடத்துவதற்கு தமது சட்ட ஆலோசனையைத் தானும் வழங்கினாரா?

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மொழி வழக்கில், இரவு பகலாக கண்விழித்திருந்து சட்டங்களை துருவி ஆராய்ந்து மாவட்ட நீதி மன்றத்தில் வெற்றியீட்டிக்கொடுத்தவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. மு. திருச்செல்வம் அவர்களே என்ற உண்மையை எவரும் மறுக்கமுடியாது. இந்த வழக்குக்கு சட்ட ஆலோசனையை வழங்கி தமது பூரண ஒத்துழைப்புத் தந்தவர் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களே. இந்த உண்மைகளை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. கோடீசுவரனே ஒப்புக்கொண்டிருக்கிறார்!

1965ம் ஆண்டு தேசிய அரசாங்கத்தின் மூலம் பழைய தமிழ் ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கும் புதிய ஊழியர்களுக்கு மூன்று ஆண்டு சிங்களத் தேர்ச்சிக்கு கால அவகாசமும் தாமே பெற்றுக்கொடுத்ததாக உரிமை கொண்டாடுவதற்கு தமிழ் காங்கிரசுக்கு கிஞ்சித்தும் அருகதை இல்லை—

1965ம் ஆண்டு யூ.என்.பி.க்கு எந்தவித நிபந்தனையுமின்றி ஆதரவு கொடுத்தவர்கள் தமிழ் காங்கிரசினர்—எவ்வித உடன்படிக்கையும் இல்லாமல் டட்லியிடம் சரணாகதி யடைந்தவர்கள் தமிழ் காங்கரசினர்!

1965ல் திரு. டட்லி சேனநாயகா தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்திய நேரத்தில், தமிழரசுக் கட்சியினர் முதன் முதலாக அவர் முன் வைத்த பிரச்சினை தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையேயாகும்.

தமிழரசுக் கட்சிக்கும், திரு டட்லி சேனநாயகாவிற்கு மிடையிலான பேச்சுவார்த்தையின் பயனாகத்தான் பழைய ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இதனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் ஊழியர்களுக்கு அதுவரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்பள உயர்வு பதவி யுயர்வு யாவும் ஒரு சேரக்கிடைத்தன. புதிய ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி பெற மேலும் மூன்றாண்டு கால அவகாசம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. புதிய ஊழியர்களில் பல துறைகளை சேர்ந்தவர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கும் அளிக்கப்பட்டது. இவற்றை உள்ளடக்கிய 700, 701 வது திறைசேரி சுற்றறிக்கைகளும வெளியிடப்பட்டன.

இது எல்லாம் தமிழரசுக் கட்சியின் சாதனைகள் என்பதை ஒவ்வொரு தமிழ் அரசாங்க ஊழியனும் அறிவான்; தமிழ் மக்கள் அறிவார்கள். தமிழ் காங்கிரஸ் கட்சியினரின் சின்னத்தனத்தால் யாரும் ஏமாற மாட்டார்கள் என்பது நிச்சயம்.

தமிழ் அரசாங்க ஊழியர்களைத் தமிழரசுக் கட்சி கைவிட்டுவிட்டது; காட்டிக் கொடுத்து விட்டது என்று சில காலத்திற்கு முன்னர் ஓலமிட்ட தமிழ் காங்கிரசினர், தமிழரசுக் கட்சியின் சாதனைகளை தமது சாதனைகளாக காட்டி வாக்குப் பிச்சை கேட்க இன்று முனைகிறார்கள். மானரோசம் கொஞ்சமாவது இவர்களுக்கு இருக்குமானால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவது இதைவிட மேலானது என்பதை தமிழ் காங்கிரசுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

---

# அரசாங்கமே ஸ்தம்பித்துப் போகும்படி அறப்போர் நடத்தியவர்கள் நாமே!

(3ம் பக்கம் தொடர்ச்சி)

யும் டாக்டர் எம். வீ. பீ. பீரிஸ் அவர்கள் வீட்டில் நடந்த நாடகத்தின் ஒரு காட்சியின் ஒரு அங்கம்தான் கடந்த ஐந்து ஆண்டுகள் பிரதமராக டட்லி பதவி ஏற்றது—இது கட்டுக்கதையல்ல—நடந்த— நடந்து முடிந்த உண்மை— 1960ல் இறக்கினோம்- 1965ல் ஏற்றினோம்- 15 உறுப்பினரைக் கொண்டே பிரதமரானார் டட்லி—அதற்கு காரணமாயிருந்தவர்கள் தமிழரசார் என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்—ஆனால் இனி யு. என். பி. ஆட்சிப்படி ஏறமுடியாது. அபசகுனம் போல வெலிமடை தொகுதியின் முடிவை நாம் கண்டு விட்டோம்.

### ஏன் வெளியேறினோம்

டட்லி துரை அவர்கள் தேசிய அரசாங்கத்தை அமைத்து ஆட்சி பொறுப்பேற்ற பின்—தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப் பெற நாங்கள் முயன்ற சமயம் எம் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க மறுத்த காரணத்தினால்— வெளியேறினோம்.

1927ல்— காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்கா சுபீட்ச இலங்கையை உருவாக்க சமஷ்டி ஆட்சியே சிறந்தது என்றார் அதையே நாமும் இன்று கேட்கிறோம்-பெறத் துடிக்கிறோம்.

கிரேக்க மொழி— லத்தின் மொழி போன்ற பல மொழிகள் குறிப்பிட்ட ஒரு காலமே புகழோடு வாழ்ந்தது. கல்தோன்றி, மண் தோன்றா காலத்தே— முன் தோன்றி மூத்த தமிழ் எம் தமிழ்—அதை படித்து— படிப்பிக்கின்ற தமிழ் ஆசிரியர்களே தமிழ்மொழிக்கு— தமிழினத்திற்கு, துரோக மிழைப்பதை நினைத்து வெட்கப்படுகிறேன்— வேதனைப்படுகிறேன். தாய் மொழி- தமிழ் மொழி— அது உன் மொழி—அதனை அழிக்காதே—இழக்காதே. அது வந்த மொழியல்ல-சொந்தமொழி—தாய்மொழிக்கு துரோகமிழைத்தவர்கள் தன் தாய்க்கே துரோக மிழைத்தவர்களாவார்கள்— இனியாவது அதனை செய்யாதீர்கள் என கேட்டுக் கொள்கின்றேன்—

### பல்கலைக் கழகம்

தமிழ் பல்கலை கழகம் அமைக்க வட—கிழக்கு மக்களுக்கு மத்தியான இடம் திருமலை எனக் கருதி அங்கு பல்கலை கழகம் அமைக்கப்பட வேண்டுமென கோரும் ஒப்பந்தத்தில் ஒப்பமிட்ட இதே திரு. தேவநாயக மவர்கள் பின்பு மட்டு நகரிலே பல்கலை கழகம் அமைய வேண்டுமென போடும் குத்துக்கரணம் கேவலமானதும்— கேலிக் குரியதுமாகும்.

திரு. தேவநாயகம் அவர்கள் 1969ல் விபுலானந்த ஞாபகார்த்த முத்திரை வெளியிடுதற்கான மனுவை சமர்ப்பித்த போது அவரை நான் பாராட்டியதாக பகிரங்க துண்டு வெளியிடு விட்டிருக்கிறார். இது அவரது அரசியல் அஞ்ஞானத்தையே காட்டுகிறது. நல்ல திட்டம் செயல் படும் போது— அது மாற்றார் கொண்டு வந்தாலும் சரி—அதனை பாராட்ட வேண்டியது அரசியல் பண்பாடு—உண்மையான அரசியல் நாகரீகம்—அதுவே தமிழர் பண்பாடு கூட.

சுவாமி விபுலானந்தருக்கு முத்திரை வெளியிடுவது பற்றி திரு. தேவநாயகம் அவர்களுக்கு முன்பு நான் 1965ல் பாராளுமன்றத்தில் கூறியுள்ளேனே— தெரியுமா அவருக்கு—வேண்டின் பாராளுமன்ற பதிவுப் புத்தகத்தைப் புரட்டிப்பார்க்கும்படி இவரை பணிவுடன் வேண்டுகிறேன். திரு. தேவநாயகம் அவர்களே திருச்செல்வம் அவர்களையும், என்னையும் பாராட்டி பேசியுள்ளாரே! அதனை ஏன்— துண்டு பிரசுரத்தில் வெளியிட மறந்து விட்டார்—

எனவே தான் கயமைத்தனமான யூ. என். பி. கட்சியில் ஒட்டிக் கொண்டிருக்கும் எட்டப்பர் கூட்டத்தை முற்றாக ஓட ஓட விரட்டி மக்கள் தங்கள் தேவைகளை பெற, உரிமைகளை பெற—முன்னாள் உருப்பினரை வீட்டிற் கனுப்பி—வீட்டை சின்னமாக கொண்ட எம்மவரை—நம்மவரை—மாணிக்க வாசகரை அனுப்பி வையுங்கள் என்று கேடகிறேன். அப்போதுதான் தமிழ் பேசுமினம் அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட இனமாக மாறும். கடந்த காலங்களில் இனத்திற்காக. அடிப்பட்டு, இரத்தம சிந்தி— போராடியவர்கள் யார்? போராட்ட காலங்களில் அரசியல் அஞ்ஞாத வாசம் புரிந்து விட்டு தேர்தல் என்றதும் மக்கள் மத்தியிலே நாங்கள் நம்மினத்தின் பாதுகாவலர்கள் என வேடம் போடும் புல்லுருவிகள், இனத்தை காட்டிக் கொடுக்கும காக்கை வன்னியர்கள்— யார் என்பதை தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொண்டு விட்டனர். எனவே எதிர்வரும் 27ந் திகதி தமிழர்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் நந் நாள். அந்நாளில் எல்லோரும் ஒருமித்து தமிழினம் சுபீட்சமடைய தமிழரசு கட்சிக்கே வாக்களியுங்கள் எனகேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திரு. இராசதுரை உரை நிகழ்த்தினார்—

அதனை தொடர்ந்து உரையாற்றிய பருத்தித்துறை வேட்பாளர் திரு. கு. துரைரெத்தினம் அவர்கள், தமிழரசு கட்சியின்றி ஆட்சி அமைக்கமுடியாது என்பதை ஆதார பூர்வமாக விளக்கி அது பற்றி வெளி நாட்டு அறிஞர் ஒருவர் "லண்டன் எக்கனமிக்ஸ்" (London Economics) என்ற சஞ்சிகையில் தமிழரசே இலங்கையின் ஆட்சி யாருக்கு என்று நிர்ணயிக்க முடியும் எனக்குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் "சமஷ்டிகளே உங்களிடம் பகிரங்கமாக கேட்கிறோம்— பதில் கூறுங்கள்" என்ற அநாமதேய நுண்டு பிரசுரத்திற்கு சாட்டையடி கொடுக்கும் விதமாக பகிரங்கமாக மேடையிலேயே பதிலடி கொடுத்தார்.

---

### நவரத்தினராசா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கருதிய அவருடைய மனைவியார் எழுந்து நவரெட்ணராசாவின கையை இழுத்துக் கொண்டு போவதற்கு முயற்சித்தார். அவரும் அப்படியே எழுந்து போயும் விட்டார்.

இன்னுமொரு வீட்டுக்காரர் வீட்டிற்கு வந்த வாக்கு வேட்டையாளர்களை வரவேற்று குளிர் பானம் வழங்கிவிட்டு, நவரெட்ணராசாவைப் பார்த்து "நீங்கள் ஒரு தமிழர்தானா? உங்களுக்குப பின்னால் வந்திருக்கும் அனைவரும் தமிழர்கள் தானா?" என்றொரு கேள்வியைக் கேட்டு தனது கேள்விக் கணைகளை ஆரம்பித்த போது, அங்கிருந்தும் நழுவி விட்டார்.

இப்படியே சென்றுகொண்டிருந்த நவரெட்ணராசாவிற்கு பல வீடுகளில், 'உங்களிறகு எங்கள் வாக்கு கிடையாது. எங்கள் வாக்கு தமிழரசிற்கே. இங்கு வருவதில் பயனில்லை' என்று சொல்லி அனுப்பி விட்டார்கள்.

அந்தோ! பரிதாபம்! சென்ற விடங்களிலெல்லாம் செம்மையாக முகத்தில் கரி பூசிக் கொண்டு வரும் நவரெட்ணராசாவிற்கு இப்படியுமா ஒருஇடி விழவேண்டும்? ஒரு உணர்ச்சி மிகு பெண்மணி தன் வீட்டு வாசலில் நின்று கொண்டு, "என் வீட்டு வாசற்படியைக் கூட மிதிக்கக்கூடாது. போங்கள்" என்று வந்தவர்களை விரட்டி விட்டாள்.

இதில் ஓர் வேடிக்கையென்ன வென்றால் டட்லி சேனநாயக்காதமிழரசுக்கட்சிக்கும், ஐ.தே. கட்சிக்கும் எந்தவிதமான ஒப்பந்தமும் இல்லையென்று பகிரங்கமாகவே பறை சாற்றிக் கொண்டு திரியும்போது அவரது சிஷ்யனான இந்த நவரெட்ணராசா குறிப்பிட்ட இந்த வாக்கு வேட்டையின் போது தமிழரசுக் கட்சிக்கும் யூ. என். பிக்கும் கணவன்—மனைவி தொடர்பு இன்றும் உள்ளது என்று சொல்லிக் கொண்டு திரிந்ததுதான்.

இதற்கெல்லாம் வாலிபர்கள நல்ல பதில் கொடுத்து, 'எமது உடலில் ஓடுவது தமிழுணர்ச்சி கலந்த சிவப்பு இரத்தமேயல்லாது', பச்சை இரததமல்ல என்றும் 'எமது தாயிடமிருந்து தமிழ்ப்பால் குடித்து வளர்ந்தவாகள் நாம். யானைப்பால் குடித்து வளரவில்லை நாங்கள்' என்றும் செம்மையான சாட்டையடி கொடுத்து, வாக்கு வேட்டைக்காக வந்த நவரெட்ண ராசாவையும் அவர் தம் ஆதரவாளர்களையும் சோகம் குடிகொண்ட முகத்துடன் அனுப்பி வைத்தனர்.

# சிங்காரச்சோலையாம் கற்குடாத் தொகுதியை சிங்களவருக்குத் தாரைவார்த்தவர் தேவநாயகம்!

## இதைவிட கல்குடா மக்களுக்கு அவர் செய்த சேவை என்ன?

### துணிவிருந்தால் பொது மேடையில் விவாதிப்போம்!

### வந்தாறுமூலையில் இராசதுரை சவால்!

வாழைச்சேனை, மே 5

"நமது இலட்சியப் பாதையை மேலும் வலிவு பெறச் செய்ய—பொலிவுத் திட்டங்களை செயல் படுத்த—தமிழினம் தலை தூக்கி வாழ—சந்தணப் பொய்கையாம் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுக்காக சலியாத உழைப்பை வழங்கிடும் வாலிபர்களின் அழைப்பில் வந்தாறுமூலையில் கற்குடாத் தொகுதி வேட்பாளர் திரு. பொ. மாணிக்கவாசகர் அவர்களை ஆதரிக்கும் நோக்கில்-சந்திக்கும் எதிர்ப்புகளைச் சமாளிக்க—நாட்டை நம்மினத்தை அடிமைப் பிடியிலிருந்து மீட்க, தமிழுக்கு நேர்ந்திடும் இன்னலைத் தவிர்க்க தமிழர்—தமிழராக தன்மானம் காத்து தரமான—தகுதியான தனித்துவமான அரசு காணத் தணியாத ஆர்வத்தால்—நிறைந்த நெஞ்சங்களுடன நெருக்கடியான தேர்தல் காலத்தில் கூடியிருக்கிறீர்கள்—

"இங்கு கூடியிருக்கும் ஆயிரமாயிரம் ஆதரவாளர்களின்கண்



களில் தமிழ்பாலுள்ளபற்றையும் தமிழினத்தின் மேல் உள்ள பாசத்தையும்—உள்ளத்தின் உணர்ச்சியையும்—முகத்தில் பொலிவையும், நடையில்—உடையில் எழுச்சியையும்—கவர்ச்சியையும் காண்கிறேன். இதைக் காணும்போதும் என்னுள்ளம் பொங்கி பூரிக்கின்றது. இது போல் தமிழர் எல்லாம் வாழ வேண்டுமென தமிழன்னையை வேண்டுகிறேன்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியன் முடிசூடா வேந்தன்—எழில் தமிழ் ஆளர்—அன்

## தேவநாயகத்தை விடப் பன்மடங்கு சேவை செய்தவர் மாணிக்கவாசகர் புள்ளி விபரம் கூறும் உண்மை இது!

புத் தம்பிகளின் ஆசை அண்ணன் திரு. இராஜதுரை அவர்கள் சித்திரை திங்கள் முப்பதாம் நாள் வந்தாறுமூலை மகா விஷ்ணு ஆலய முன்றலில் தமிழரசு கட்சி வேட்பாளர் திரு. பொ. மாணிக்கவாசகர் அவர்களை ஆதரித்து நடைபெற்ற கட்சி பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது பலத்த கரகோஷங்களுக்கிடையே கூறினர்.

கூட்டத்திற்கு முன்னதாக பெருந்திரளான இஸ்லாமிய தமிழ்—ஆதரவாளர்கள் கற்குடா தொகுதியின் பல பாகங்களிலுமிருந்து மக்கள் கூட்டம திரண்டு வந்து நின்ற காட்சி வந்தாறுமூலையில் சரித்திரமே கண்டறியாத காட்சியாக திருவிழாக் கோலம் கொண்டிருந்தது.

அரசியல் அரசியலாக அமையட்டும்

திரு. இராஜதுரை அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

அரசியல், அரசியலாக அமையவேண்டும். அந்தப்புர செய்திகள், அடுத்த வீட்டு சம்பவங்கள், குடும்ப குழப்பங்கள், அரசியலுக்கு வரக் கூடாது. அப்படி அவர்கள் பேச நினைத்தால் அரசியல் நாகரீகம் தெரியாத அவர்களுக்கு அவர்களது துப்பு கெட்ட செய்திகளை, நாற்றமெடுத்த நாறிப்போன சம்பவங்களை கிளறிவிட்டு துர்நாற்றம் மூக்கிலடிக்க வைப்போம் என்பதையும் மிக வேதனையுடன் சொல்லி வைக்கிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக திரு. தேவநாயகம் இப்பகுதி மக்களுக்கு—இந்த நாட்டுக்கு சாதித்த சாதனைகள் என்ன? செய்து முடித்த செயற்கரிய சேவைகள் என்ன? துணிவிருந்தால் துளியளவாவது அவர் செய்திருந்தால் பொதுமேடைக்கு வாருங்கள் வாதிட்டுப்பார்ப்போம் என அழைப்பு விடுகிறேன். நீங்கள் வர மாட்டீர்கள் என்பது எங்களுக்கு தெரியும்—நன்கு புரியும்—முடிந்தால்—முடியுமென்றால்—காலம் கடந்துவிடவில்லை பொதுமேடையில் சந்திக்க நாங்கள் தயார்! நீங்கள் தயாரா? திரு. மாணிக்கவாசகர் உறுப்பினராக இருந்த காலத்தில் அவர் செய்த பொது வேலைகளில் நூறில் ஒரு பங்காவது செய்தீரா? இதனை நாமறிவோம்—இந்த நாடறியும்.

ஆக ரூபா 35,000

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த நாட்டின் நீர்பாசனத் திட்டத்தில் குளக் கட்டு திருத்தங்களுக்கு அவர் எமக்கு எடுத்து தந்த மானியம் ரூபாய் 35000/ மட்டுமே இதை மறுப்பாரா? இதை மறுக்கும் துணிவிருந்தால் மறு கூட்டத்தில் பதில் அளிக்கட்டும்!

திரு. மாணிக்கவாசகர் உறுப்பினராக இருந்த காலத்தில் ஏழு நீர்ப்பாசன குளங்களை கட்டுவித்தாரே! திரு. தேவநாயகம் இது வரை ஒரு குளமாவது கட்டுவித்தாரா? திரு. மாணிக்கவாசகரின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வடமுனை குடியேற்றத்திட்டம், வாகரையில் மாணிக்கபுர குடியேற்றத் திட்டம், முறக்கொட்டான் சேனையில் குரு குல மீன் தொழிலாளர் குடியேற்றத் திட்டம் என பல்வேறு புது திட்டங்கள் உருவாக்கப்பட்டதே—இவர் காலத்தில் ஏதாவது ஒரு குடியேற்றத் திட்டம் உருவாக்கப் பட்டதாக வரலாறே கிடையாது;

எத்தனையோ காலமாக கற்குடா மீன் பிடியாளர் தங்களுக்கென ஒரு பகுதியை குடியேற்ற திட்டமாக்கி தரும்படி வற்புறுத்துகின்றனரே—செய்து கொடுத்தாரா? இந்த ஐந்து ஆண்டுகளாக—கிராமிய மின்சார விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் விஸ்தரிக்கப்பட்ட மின்சாரத் திட்டத்தை தான் செய்து முடித்ததாக தம் பட்டமடிக்கும் அவரது செயல் சிரிப்புக்குரியது—தனிப்பட்ட அவரது நண்பர்கள், உறவினர்கள், உதவியாளர்கள் இவர்களைத் தவிர, ஒரு குறிப்பிட்ட முதலாளித்துவ கும்பலுக்கும் தனிப்பட்ட தன் சுயநல நோக்கத்திற்கு உதவியுள்ளாரே தவிர இந்த நாட்டுக்கு அவர் செய்த செயல் — சேவை எது—இதற்கு பதில் அவராலோ — அல்லது அவரது தேர்தல் ஏஜெண்டுகளாலோ கூற முடியாது — கூறவும் மாட்டார்கள்.

பனிச்சங்கேணிப் பாலம்

பனிச்சங்கேணியில் பாலம் அமைத்தேன் என பறைசாற்றுகிறரே — அதன் உண்மை என்ன? 1948ல் ஏருவூர் — கோறளை பற்று இரு பகுதியும் ஒரு இறைவரி உத்தியோகத்தரின் நிர்வாகத்தின் கீழ் இருந்த சமயம் —அப்போது இறைவரி அதிகாரியாக கடமை புரிந்து வரும் தற்போது யூ. என். பி. வேட்பாளராக திருமலையில் போட்டியிடுபவருமான திரு. நவரெட்ணராசா காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டு திட்டம் தீட்டப்பட்டது என்பதை உங்கள் மத்தியில் சொல்லிவைக்க ஆசைப்படுகிறேன்.

சிங்காரச் சோலையாம் எம் பூமி — செந்தமிழர் வாழும் திருநாடாம் எம் கற்குடா தொகுதியின் ஒரு பகுதியை இன்று சிங்கள மக்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்து விட்டார்—சிங்கள ஆட்சிக்கு வால் பிடிக்கும் திரு. தேவநாயகம்.

தமிழன் தாழ்த்தப்பட வேண்டியவனு

இதுவரை கற்குடா தொகுதியில் 29 சிங்கள ஆசிரியர்களை நுழைக்க முடிந்தது நம் நாட்டில் — ஒரு மாணவன் எஸ். எஸ். ஸி. வரை படித்து முடிக்க குறைந்தது பதினைந்து வருடங்களாவது செல்லும், இந்த 15 ஆண்டுகளுக்கு பின்னே—சிங்களம் படித்து இந்த மாணவர்கள் தொழிலை தேடும் காலத்தில் வேலையில்லாதார் தொகை ஏறத்தாழ 25 லட்சத்திற்கு மேலாகும —அப்போது நம் மக்களின் நிலையென்ன? அந்த காலத்தில் ஆட்சி மன்றத்தில் அமரப் போவது யார்? தாழத் தப்பட வேண்டிய இனம் தானு தமிழன் இனம். இன்று இலங்கை பொலீஸ் பகுதியில கடமைபுரிந்த உத்தியோகத்தர் தொகை 17 சதவீதம் என குறைக்கப்பட்டு விட்டதே?

இந்த உண்மை புரியுமா அவருக்கு. இந்நிலையில் 15 ஆண்டுகளுக்கு பின் தமிழன் எங்கே போவது.

வாக்குறுதிகள் என்னவாயின

திரு. மாணிக்கவாசகர் காலத்தில் கல்வி நிலை உயர்ந்திருந்தது. பாடசாலை பல கட்டப்பட்டன. கடந்த ஐந்த ஆண்டுகளில் ஏதாவது பாடசாலை கட்டப்பட்டதா? திறக்கப்பட்டதா? மந்திரி பிரேமதாஸ வந்தார்—வாக்குறுதி தந்தார்—என்னவென்று? (ரூபாய் 7000/-) ஏழாயிரம் செலவில் கட்டடம் போட்டு தருவதாக? போட்டு தந்தாரா? எங்கே? எப்போ? அல்லது இதுவரை அடித்தளமாவது போடப் பட்டதா?

வந்தாறுமூலையில் நவீன புகையிரத நிலையம் அமைத்து தருவேன் என அமைச்சர் குருள்ள கூறினரே—எங்கே அந்த நவீன புகையிரத நிலையம். எதுவுமே நடைபெறவில்லை—இது மக்களை ஏமாற்ற கையாண்ட அரசியல் தந்திரம்—கண் துடைப்பு—மெய்யை பொய்யாக்குவதில் திறமைசாலி அவர்—ஆனல் ஒன்றை மட்டும் திறமையாக செய்து முடித்தார்—அதுதான் சிங்கள ஆசிரியர்களை நம் மத்தியிலே நிறைய நுழையவிட்டதாகும். அந்த பெருமை அவரையே சாரட்டும்.

டட்லியின் 'சாதனை'

திருக்கோணேஸ்வரம் கோயிலை புனித நகரமாக பிரகடனப்படுத்த அச்சமயம் உள்ளூராட்சி அமைச்சராக இருநத திரு. திருச்செல்வம் அவர்கள் ஒரு ஆணைக்

## நன்றி கொன்ற யூ. என். பி.க்கு நாட்டில் இனி எதிர்காலமில்லை!


குழுவை நியமித்து அந்த குழு கருமமாற்ற முன்பு நடந்ததென்ன? சேருவாவிலையிலிருந்து வந்த ஒரு புத்த பிக்குவுக்காக அந்த திட்டத்தை உடனடியாக கைவிடும்படி உத்தரவு பிறப்பித்தவர் இதே டட்லி என்பதை உங்கள் மத்தியில் சொல்லிவைக்கிறேன்.

டட்லி பாடிய முகாரி

இருபது லட்சத்திற்குமேற்பட்ட தமிழரது நன்மையை ஒரே ஒரு புத்த பிக்குவுக்காக உதறி எறிந்த இதே டட்லி தான் சில தினங்களுக்கு முன்பு இங்கு விஜயம செய்து— சிங்கள — தமிழ்— இஸ்லாமிய மக்களுக்கு இன மத பேதமின்றி சேவை செய்து ஐக்கிய இலங்கையை ஏற்படுத்தினேன் என்று முகாரி பாடி வைத்தார். தமிழரசு உதவியின்றி எம்மால் அரசு அமைக்க முடியும் —என்று கூறிய அவரைப் பார்த்துக் கேட்கிறோம். கடந்த 1960ம் ஆண்டுக்கு பின்புள்ள சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்படி—பிரதமரின் இந்த ஆணவப் பேச்சுக்கு—சவுக்கடி கொடுக்க—தகுதியான பதிலளிக்க கற்குடா தொகுதி வாழ் மக்கள் தகுந்த பாடம் கற்பிக்கத் தான் போகிறார்கள்—அதையும் அறியத்தான் போகிறார் அவர்—

நம்பிக்கையை நாசமாக்கவில்லை

1948ல் எங்கள் தந்தை செல்வா கூறியதையே 1956ல் மக்கள் உணர்ந்து தமிழரசாரிடம் நம்பிக்கை கொண்டு பொறுப்பை ஒப்படைத்தனர். அந்த நம்பிக்கையை நாசமாக்காத நாங்கள்— தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டு வந்த அரசை எதிர்த்தோம்— ஆட்சி ஆட்டம் கண்டது— ஆட்சியே அசந்து போகும் அளவு ராணுவத்திடம் பொறுப்பை ஒப்படைத்தனர் இந்த நாடாள்வோர். எம்மை அடக்க— அழிக்க— முடிய



வில்லை அவர்களால். அரசியலே அஸ்தமிக்கும் நிலையை ஏற்படுத்தினேம். அந்த பெருமை தமிழரசைத் தவிர வேறு யாருக்கு உண்டு இந்த நாட்டில்.

அடிபட்டோம் உதைபட்டோம்

நாங்களும் அற்ப சலுகைகளுக்காக அரைமந்திரி பதவி —கால் மந்திரி பதவிகளுக்கு ஆசைப்பட்டிருந்தால் தனிச் சிங்களம் எப்போதோ இந்த நாட்டில் கொடி கட்டி பறந்திருக்கும். வெறிகொண்ட சிங்கள வெறியர்களை எதிர்த்து— அடிபட்டு— அல்லற்பட்டு— சிறை பட்டு ஓரளவு உரிமைகளை சட்ட பூர்வமாகப் பெற்றேம்—

கடந்த பொதுத்தேர்தலின் பின்பு டட்லி ஐயாவுக்கும் —சிறிமா அம்மையாருக்கும் எம்முதவி தேவைப்பட்டது. ரத்மலானை விமான நிலையத்தில் எம் தந்தை செல்வாவை காத்திருந்து—அழைத்துச் சென்று சில வாக்குறுதிகளை எங்களுக்கு தந்த பின்னரே —கிழவன் கொடுத்த துண்டைக்கொண்டு ராணி மாளிகையில் தேசாதிபதியைக் கண்டு ஆட்சி அமைக்க அந்தஸ்து வந்து விட்டது என கூறி பின்பு பிரதமரானர். மறந்திருக்க மாட்டார் எம் மதிப்புககுரிய பிரதமர் என நம்புகிறேம்—

மறந்திருந்தால் ஞாபகப் படுத்துகிறேம் 24ந் திகதி நள்ளிரவு தற்போது சோவியத் தூதுவராக கடமை புரி

(2-ம் பக்கம் பார்க்க)

தலைமை தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

## தமிழரசாருக்குக் கல்வீச்சு

திருகோணமலை மே, 5

தமிழரசு வாலிபர் சிலர், திரு. நேமிநாதன் அவர்கது் வீட்டிற்கு அருகிலிருக்கும் தேநீர்க் கடையொன்றில் தேநீர் அருந்திவிட்டு வெளியே வந்த சமயத்தில் அவர்களுக்குச்சரமாரியாகக் கற்கள் வீசப்பட்டன. சில தினங்களுக்கு முன் பிற்பகலில் இந் நிகழ்சசி நடைபெற்றது.

பஸ் நிலையத்திற்குள்ளிருந்துதான் இவ்விளைஞர்களை நோக்கி கற்கள் வரிசையாக வந்த வண்ணமிருந்தன. நல்ல வேளையாக ஒருவரும் காயமடையவில்லை. பஸ்நிலயத்திற்குள்ளிருக்கும் சிங்கள மரக்கறிக்கடைகளைச்சேர்ந்த சிங்களவர்களே இக்கல்லெறியும் காடைத்தனத்தைப் புரிந்த வீரர்களௌனறு நம்பப்படுகின்றது. வேகமாக வந்த கற்களிற் சில அந்த தேநீர்க் கடைக்குள்ளும் சென்று விழுந்தன.

அடுத்து எழுந்த பரபரப்பான சூழ்நிலையை நேமிநாதன் தக்க சமயததில் வந்து தடுத்து நிறுத்தினர். தமிழரசு வாலிபர்களை கலைந்து போகும்படி நேமி வேண்டவே அவர்கள் தத்தம் வீடு நோக்கிச் சென்றுவிட்டனர்.

தமிழரசு வாலிபர்களின் ஆர்வத்தை தடுத்து நிறுத்தி பயமுறுத்தல் செய்யும் காரியமாகவே மேற்படி கல்வீச்சுச்சம்பவம் நடைபெற்றது. ஆயினும் இக்கல்லெறிகளால் தமிழரசு வாலிபரது எழுச்சியைத் தடுக்க முடியுமென யாராவது நினைத்திருந்தால் அதைவிட மடைமைத்தனம் வேறில்லை.

# உரிமைக்காகத் தமிழ் காங்கிரஸ் ஒருபோதுமே போராடாது!

## வாடியடியில் ஆலாலசுந்தரம் பரணி!

கிளிநொச்சி மே 6

"1947 முதல் 1956 வரை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் செய்த சேவைகளின் நீண்ட பட்டியல்கள் பத்திரிகை மூலமும்—காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலமும் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றி ஒரு வார்த்தையையும் காணும். அடிக்கடி ஐக்கிய தேசியக் கட்சியைப் புகழ்ந்து பாடி இருக்கின்றார்கள். அதைத் தவிர எதையும் காணோம்.


புகழ்பாடி வளர விரும்புகின்றார்கள்—பகை தேடிவரக் கூடாது என விரும்புகின்றார்கள்—எவர் ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் போராடப் போவதில்லை—சுதந்திரம் கேட்கப் போவதில்லை —எனினும் ஐக்கிய தேசியக் கட்சி வந்தால் சுதந்திரப் பேச்சே இருக்காது.

சிங்கள எஜமானர்களினதும்—தமிழ் ஊழியர்களினதும் கூட்டு ஆட்சி நடைபெறும் என்று காங்கிரஸ் சொல்லுகின்றது. வெள்ளைக்காரன் இலங்கைக்கு வந்தபோது இலங்கை எப்படி இருந்தது. அவன் இலங்கையை விட்டு வெளியேறிய போது இலங்கை எப்படி இருந்தது இது காங்கிரஸ்காரர் பலருக்குத் தெரியும்.

இந்நாட்டு மக்களில் பலர் குறிப்பாக இராமநாதன்—அருணசலம்—பெரிய சேனநாயக்கா-பாரன் ஜயதிலகா —ஜாயா போன்றவர்கள் எவருமே வெள்ளைக்கார ஆட்சியை விரும்பவில்லை. சுதந்திரத்தையே விரும்பினர். அப்போது காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலமும் சுதந்திரத்தை விரும்பியிருப்பார். இன்று சுகபோகமாக இருக்க விரும்புவதால் பாலங்களுடனும்—ரோட்டுகளுடனும் முடிவு செய்துவிடுகின்றார்கள்—

வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படும் என்று கூறுகின்ற இவர்கள்—சுதந்திரம்-மொழி உரிமைபற்றிப பேசுகிறார்களில்லை"

இவ்வாறு பூநகரி வாடியடியில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. மு. ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார். திரு. செல்லத்துரை சமாதான நீதிபதி தலைமை வகித்தார். திரு. நடராசா, சிவசுப்பிரமணியம் இன்னும் பலர் பேசினர். செல்வி. ப. குகானந்தலெட்சுமி தேசிய கீதம் பாடினார்.



## மண்முனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கட்டிடமும் — புனர் அமைப்பும் செய்யப்பட்டுள்ளது.

மகிளடித்தீவில் ரூபா 22,000 த்தில் புதிய பாடசாலை கட்டப்படுகிறது.

படையாண்ட வெளியில் 10,000 ரூபாயில் புதிய பாடசாலை கட்டிடம் கட்டப்படுகிறது.

கொக்கட்டுச்சோலை இராமகிருஷ்ணன் மிசன் பாடசாலைக் கூரை வேலைக்கான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்பிலாந்துறை முதற்கொண்டு மண்முனை வரையுள்ள ஆற்றோரத்தில் உப்பு நீர் கட்டுக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது; இதனுல் பல் நூறு விவசாயிகள் பயனடைகிறார்கள்.

அம்பிலாந்துறை—மண்முனை ஆகிய துறைகளுக்கு இயந்திரப்படகுகள் போட்டுக் கொடுத்ததின் மூலம் பிரயாண வசதி செய்யப்பட்டுள்ளது.

மண்முனைக்கொரு போலீஸ் நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டுள்ளது.

இத்தனை காலம் வரையும் ஒரேயொரு தோம்புதோர் பிரிவாக இருந்த மண்முனைப் பகுதியை இரண்டாகப் பிரித்து இரு தோம்புதோர் நியமித்தது.

மண்முனைப் பகுதிக்கொரு சடுதி மரண அதிகாரி நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மண்முனைப் பகுதிக்குச் சமாதான நீதிபதியொருவர் நியமித்துக் கொடுத்தது.

இன்னும் பல பாதைகள் திருத்துவதற்கும்—புனர் அமைப்புச் செய்வதற்குமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டுவருகிறது.

கொக்கட்டுச்சோலையிலுள்ள உத்தரவு வாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் நிலையத்தைப் பெருப்பிப்பதுவும்—அதுடன் சேர்த்து பசளைக் களஞ்சியம் ஒன்றை ஏற்படுத்துவதற்குப் பணம் ஒதுக்கி வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது.

## சிவசிதம்பரத்தின் பெயர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக பின்வரும் கேள்விகளை வடமராட்சி மக்கள் கேட்கிறார்கள்.

இவ்விளம்பரம் கட்டட இலாகா இட்டதா-அல்லது திரு. சிவசிதம்பரம் இட்டதா? அவர் உபசபாநாயகராகியது எப்போ? பா. உ. எப்போ? ஒப்பந்தக்காரருக்கு (4:ம் வரி) 'திருரு' என்னும் அடைமொழி பெயருக்கு முன் சேர்க்கப்படவில்லை. "திரு. சிவசிதம்பரம்" என்ன முறையில் (ஒப்பந்தக்காரர்—அடிக்கல் நாட்டியவர் என்பதுபோல) இடம் பெறுகிறார்?

இது கட்டட பகுதியினர் உத்தியோக தோரணையில் தொங்கவிட்ட விளம்பரப் பலகையா? 'அப்படியானுல்' அது மும்மொழிகளிலும் இடம் பெற்றிருக்குமல்லவா? திகதி இடப்படாத இவ்விளம்பரம் இருப்பதை அனுமதிக்கலாமா?

இதுமட்டுமன்றி வைத்தியசாலை வீதியின் முகப்பில் "எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" "கடன்பட்டார் உடுப்பிட்டி பெருமக்கள்" என்றும்.

மந்திகை— யாழ்ப்பாணம் சந்தியில் "இதோ இங்கே சிவாவின் சேவை" என்றும் எழுதப்பட்டுள்ளன.

இதுபற்றி இப்பகுதிமக்கள் பின்வருமாறு பேசிக்கொள்ளுகின்றனர்.

"கடன் பட்டார் உடுப்பிட்டிப் பெருமக்கள்" ஆம் உண்மை பெருமக்கள் எனப்படும் முதலாளிகள் சிலரும் (இவர்கள் தம்மைப் பெருமக்களென நினைத்து வாக்கு வேட்டைக்குச் செல்கிறார்கள்) சொந்த ஊர் மாற்றங்கள், உயர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் சிலரும் வாக்கு வேட்டைக்குச் செல்கிறார்கள்.

வைத்தியசாலையில் மாற்றம் பெற்றுவந்த வைத்திய அதிகாரிகள் சிலரும் கடன் பட்டவர் என்ற முறையில் வாக்கு வேட்டை செய்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் உடுப்பிட்டி மக்கள் கடன் படவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் செய்யவேண்டிய பல கடமைகளில் இது ஒரு சிறு அம்சம்.

கட்சி முறையில் அமைந்த இன்றைய அரசியல் அரங்கில் தொகுதிக்குச் செய்ய வேண்டிய கடமைகளைஎதிர்க் கட்சியினர் கூடச்செய்கிறார்கள். இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன் இருந்த கிராமசங்க ஒழுங்கைகள் இப்போ தார் ரோட்டுக்களாகிவிட்டன. சாவகச்சேரிக்குச் செல்லவிருந்த மாகாண வைத்தியசாலையாக மந்திகை வைத்தியசாலை வரச் செய்த பெருமை காலஞ்சென்ற திருவாளர் கந்தையா அவர்களைச்சாரும்.

மூன்று வைத்திய அதிகாரிகள் இருந்த இடத்தில் இன்று 14 வைத்திய அதிகாரிகற் இருக்கிறார்களென்றால் அது பெருமையாகாது. தொடர்ந்து இன்னும் சில காலத்தில் 30 வைத்தியஅதிகாரிகளாகும். இதற்கு நான்தான்தகுந்தவன் என்று கூறுவது வெட்கக்கேடானதாகும்.

வீட்டுக்கு வீடு வாக்கு வேட்டை ஒருபுறம். ரோட்டுக்களில் கிராமத்தையே இழிவுபடுத்தும் அகங்கார வார்த்தைகள் மறுபுறம். இன்னும் என்னென்ன திருகுதாளங்களோ!

கடனைக்காட்டி வாக்கு வேட்டையாடும் இப்பெரிய சிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் பகுதி பறிபோவதறியும் காலம் அதிக தூரத்தில் இல்லை."

இவ்வாறெல்லாம் உடுப்பிட்டி தொகுதி மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

## தமிழ்தாய் மன்றம்

கொழும்பு, மே 7

தமிழ்த்தாய் மன்றத்தின் கொழும்பு மாமன்ற அமைப்புவிழா இன்று மாலை 6 மணிக்கு சரசுவதி மண்டபத்தில் திரு. அண்ணுதாசன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. கவிஞர் காசி ஆனந்தன், ஈழவேந்தன், ரஜனி நமசிவாயம் ஆகியோரின் சொற்பொழிவை அடுத்து கொமெடியன்ஸ் அளிக்கும் 'ஏமாறச் சொன்னது யாரோ' என்ற நகைச் சுவை நாடகம் இடம்பெறும்.

## அரசியல்...

(1ம் பக்கம் தொடர்ச்சி)

சேர்ந்தேன். நான் அங்கு சென்றபடியால்தான் பல உயிர்களை இரத்தவெள்ளத்திலிருந்து காப்பாற்ற முடிநதது-

"பருத்தித்துறைத் தொகுதியை பொறுத்தவரை உடுப்பிட்டி தொகுதியை விட ஒன்றரை மடங்கு கூடிய உதவிகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளேன்.

இவ்வாறு பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான தமிழரசுட் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு. க. துரைரத்தினம் குறிப்பிட்டார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் திரு. துரைரத்தினம் மேலும் கூறியதாவது:-

தொகுதியை முன்னேற்றுவதற்கு என்னுல் இயன்ற அளவு முயற்சித்து வெற்றி அடைத்து இருக்கின்றேன். அவை யாவும் உங்களுக்கு தெரியும் நான் கூற இஷ்டப் படவில்லை. இருந்தும் உடுப்பிட்டிதொகுதியிலும்பார்க்க ஒன்றரை மடங்கு கூடிய உதவியைதான் அரசாங்கத்திடம் இருந்து பெற்று இருக்கின்றேன். இங்கு கூடி இருக்கும் மக்கள் திரளைப் பார்க்கும்போது. இம்முறை நான் 5,000க்கும் அதிகமான வாக்குகளால் வெற்றிஅடைவது நிச்சயம்.

## எங்கள்......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வற்றை என்னுல் எவ்வளவு கெதியில் தீர்க்கமுடியுமோ அவ்வளவு கால எல்லையுள் தீர்த்து முடிப்பேன்".

இவ்வாறு நெடுந்தீவு மேற்கில் நடைபெற்றதமிழரசுக் கட்சிப் பிரச்சாரக் கூட்டத்தில் தீவுப்பகுதி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

திரு. க. குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் தமிழரசுக் கட்சி தமிழரின் 'இழந்த உரிமையை மீட்பதறகாக கடந்த பல வருடங்களாக பாராளுமன்றத்தில் உள்ளும் புறமும பாராடிவருகிறது. இனியும் அவ்விதமே போராடும். பட்டுப்போன மரமான காங்கிரசாலோ, பட்டு முறிந்த எட்டாவது கொப்பான நவரெத்தினத்தாலோ தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

தங்களின் சுயநலங்களை முன்வைத்து தமிழ் மக்கள் மத்தியில் பிளவை உண்டாக்க விரும்பும் அரசியல் வாதிகளுக்குத் தமிழ் மக்கள் இத் தேர்தலில் சரியாண பாடத்தைக் கற்பிப்பார்கள்.

தீவுப்பகுதியில் சுயேட்சையாகப் போட்டியிடும் திரு. கதிரவேலு தமிழரசுக் கட்சியிடம் தனைத் தீவுப்பகுதியில் தமிழரசுக்கட்சி அபேட்சகராக போட்டியிட அனுமதிக்கும்படி விண்ணப்பித்தார். அன்று தமிழரசுக் கட்சி அவருக்கு டிக்கட் வழங்கியிருந்தால் தமிழரசுக் கட்சியைப்பற்றிப் போற்றிப் புகழ்ந்திருப்பார். ஆனுல் தமிழரசுக் கட்சி அனுமதி வழங்காததால் இன்று தமிழரசுக் கட்சி மீது வசை பாடிவருகிறார்.

சிவப்புத் துண்டுப் பிரசுரம் அடித்து விநியோகிக்கும் திரு. கதிரவேலுவுக்கு நல்ல பாடத்தைப் படிப்பிப்பீர்கள் என்பது இங்கே திரண்டிருக்கும் மக்கள் வெள்ளம் எனக்கு எடுத்து இயம்புகிறது".

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 7-ம் திகதி வியாழக்கிழமை அசசிட்டு பிரசுரிக்கப்பட்டது
ஆசிரியர்: கோவை மகேசன்,